


தஞ்சாவூர் மாவட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் நடைபெற்ற ஒரு இலட்சம் பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா வழங்கும் விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர ஸ்கூட்டரினை வழங்கினார்கள். மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேகப், திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன், தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் கா.அண்ணாதுரை, மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஊராட்சித்தலைவர் உஷா புண்ணியமூர்த்தி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடத்தில் அமைக்கப்பட்டுள்ள

# கலைஞர் உலகம் அருங்காட்சியகம்!

## பொதுமக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டு நெகிழ்ச்சி !

சென்னை, மார்ச் 8 - சென்னை மெரினாவில் முத்தமிழறிஞர் கலைஞருக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில், நவீன வசதிகளுடன் கூடிய கலைஞர் உலகம் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.



இந்த அருங்காட்சியகத்தை மார்ச் 6 முதல் பொதுமக்கள் பார்வையிட தமிழ்நாடு அரசு அனுமதியளித்துள்ளது. இந்த நிலையில் இணையம் மூலம் முன்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்ற பொதுமக்கள் கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை ஆர்வமுடன் ரசித்தனர். உள்ளே சென்று திரும்பி வெளியே வர ஒன்றரை மணி நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

7D தொழில்நுட்பத்தில் சென்னை - மன்னை விரைவு வண்டி பயணம், கலைஞர் புகைப் படங்கள், கலை அறிஞர் கலைஞர் என்ற தலைப்பில் குறும்படம் என அருங்காட்சியகம் முழுவதும் நவீன தொழில் நுட்பங்களால் வடிவமைக் கப்பட்டிருப்பதாக பொதுமக் கள் தெரிவித்தனர்.

கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை காலை 9 மணி முதல் இரவு 8 மணிக்குள் பார் வையிட அனுமதி வழங் கப்படும் என்றும், பொது மக்கள் தங்களுக்கு வசதியான காட்சி நேரத் தைத் தேர்வு செய்து முன் கூட்டியே அனுமதிச் சீட் டினை கட்டணமில்லாமல் பெற்றுக் கொள்ளலாம் என தமிழ் நாடு அரசு தெரிவித் துள்ளது.

ஒருவர் ஒரு அலைபேசி எண் மூலம் அதிகபட்ச மாக 5 அனுமதிச் சீட்டுகள் வரை பெற்றுக் கொள்ள இயலும் என்றும் தமிழ் நாடு அரசு கூறியுள்ளது.

### முதல்வர் தொடங்கி வைத்த 'நீங்கள் நலமா' திட்டம்–

# இனி பொதுமக்களிடம் இருந்து எட்டா தூரத்தில் யாரும் இல்லை!

## 'தினத்தந்தி' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மார்ச் 8 - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த 'நீங்கள் நலமா' திட்டத்தின் மூலம் இனி பொதுமக்களிடம் இருந்து எட்டா தூரத்தில் யாரும் இல்லை என தினத்தந்தி நாளிதழ் தலையங்கத்தில் 6.3.2024 அன்று பாராட்டியுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

"நீங்கள் நலமா?" என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை இன்று சென்னையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

தமிழ்நாடு அரசு பல திட்டங்களை மக்களுக்காக தீட்டி அறிவித்து வருகிறது. ஆனால், இந்த திட்டத்தின் பயன்களெல்லாம் அடிமட்டத்தில் உள்ள மக்களுக்கும் போய் சேர்வதில்தான் அதன் வெற்றி இருக்கிறது. யாருக்காக இந்த திட்டங்கள் தீட்டப்படுகிறதோ, அவர்களுக்கு சிந்தாமல் சிதறாமல் போய் சேர்ந்தால்தான், அந்த திட்டம் போடப்பட்டதின் நோக்கம்நிறைவேறுவதாக இருக்கும்.

மறைந்த பிரதமர் ராஜீவ்காந்தி, இந்த பொருள் குறித்து 1985ல் பேசியது இன்றளவும் வழிகாட்டியாக இருக்கிறது. "சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் நலனுக்காக அரசு ஒரு ரூபாய் செலவழித்தால், அது யாருக்கு போய் சேர வேண்டுமோ? அவர்களுக்கு 15 காசுதான் பலனாக கிடைக்கிறது" என்று பிரதமரே கூறியது பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது.




இந்த கருத்து சுப்ரீம் கோர்ட்டிலும் பல ஆண்டுகளுக்கு பிறகு மேற்கோளாக ஒரு வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது நீதிபதி, "இந்த கருத்தை ராஜீவ்காந்தி கூறி 32 ஆண்டுகள் ஆகியும் இன்னும் நிலைமை மாறவில்லை என்பதுபோல தெரிகிறது" என்றார்.

அப்போது மட்டுமல்ல, இப்போதும் இந்தநிலை ஆங்காங்கு நடப்பது கவலை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆதரவற்ற முதியோருக்கு தமிழ்நாடுஅரசு உதவித்தொகையாக மாதம் ரூ.1,000 வழங்கிவருகிறது. சில புல்லுருவிகள் இந்த தொகையையும் கையாடல் செய்ததாக சமீபத்தில் செய்தி வெளியாகியுள்ளது அதிர்ச்சியை அளிக்கிறது. முதியோர் வங்கிக் கணக்குக்கு போக வேண்டிய இந்த ஆயிரம் ரூபாயை வேறு ஒரு தனி நபர் கணக்குக்கு பரிமாற்றம் செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதுபோல, தமிழ்நாடு அரசு பல நலத்திட்டங்களை மக்களுக்காக நிறைவேற்றி வருகிறது. ஒரு கோடியே 15 லட்சத்து 16 ஆயிரத்து 292 மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத்தொகை அனுப்பப் படுகிறது. புதுமைப்பெண் திட்டத்தில் 4 லட்சத்து 81 ஆயிரத்து 75 மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 போய் சேர்கிறது. இதுபோல, பல உதவித்தொகைகள் அனுப்பப் படுகிறது. பல நலத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அரசின் பல திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது மக்களுடன் நேரடி தொடர்புகொண்டு நிறைவேற்ற உத்தரவிட்டுள்ளார்.

'மக்களை தேடி மருத்துவம்', 'இல்லம் தேடி கல்வி', 'உங்கள் ஊரில் கலெக்டர்' என்பது போல, மக்களுக்கான திட்டங்களின் பலன்கள் அவர்களுக்கு போய் சேர்கிறதா? என்பதை உறுதி செய்யும் வகையில், "நீங்கள் நலமா?" என்ற பெயரில் ஒரு புதிய திட்டத்தை இன்று சென்னையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். நீங்கள் நலமா? திட்டத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்பட அனைத்து அமைச்சர்கள், தலைமை செயலாளர், அனைத்து துறை செயலாளர்கள், துறை தலைவர்கள், மாவட்ட கலெக்டர்கள் என அனைத்து அதிகாரிகளும் பொதுமக்களோடு, அவர்களின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு "நீங்கள் நலமா?" என்று கேட்டு, அரசின் நலத்திட்டங்கள், அரசால் நிறைவேற்றப்படும் சேவைகள் பற்றியும், அது வந்து சேர்கிறதா? என்பது உள்பட கருத்துகளை கேட்கப் போகிறார்கள்.

இது ஒரு நல்ல திட்டம், வரவேற்கத் தகுந்த திட்டம், பாராட்டத்தக்க திட்டம். இனி பொதுமக்களிடம் இருந்து எட்டாதூரத்தில்யாரும்இல்லை. முதல் அமைச்சரே பொதுமக்களிடம் நீங்கள் நலமா? திட்டத்தின் மூலம் நேரடியாக தொடர்புகொள்வது, அரசு அதிகாரிகளையும் தொடர்புகொள்ள வைக்கும். எந்த திட்டத்திலும் முறைகேடு நடக்காமல், அனைத்து ஓட்டைகளையும் அடைக்க வைக்கவும், அனைத்து பலன்களும் மக்களுக்கு நேரடியாக போய் சேரவும் இது உதவியாக இருக்கும்.

இவ்வாறு அத்தலையங் கத்தில் கூறப்பட்டுள்ளது.

# துபாயில் முதல்வரின் 71வது பிறந்த நாள் விழா!

## அமீரக தி.மு.க. அமைப்பாளர் எஸ்.எஸ்.மீரான் ஏற்பாடு!

துபாய், மார்ச் 8- தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 71வது பிறந்த நாள் விழா கொண்டாட்டம் துபாய் "லேண்ட்மார்க் ஹோட்டல் பனியாஸ் ஸ்கொயர்" வளாகத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

அயலக தமிழர் வாரிய உறுப்பினரும்,அமீரக திமுக பொறுப்பாளருமான எஸ்.எஸ்.மீரான் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்ச்சியை ஏஜிஎம் பைரோஸ்கான் தொகுத்து வழங்கினார்.

கழக மூத்த முன்னோடி , அமீரக எழுத்தாளர் குழுமத்தின் தலைவர் ஆசீஃப் மீரான் தலைமை வகித்த இந்த கொண்டாட்டத்தில் அமீரக காயிதே மில்லத் பேரவையின் ஹமீது ரஹ்மான்,கவிஞர் சசிக்குமார், திராவிட இயக்க சிந்தனையாளர் பிலால் அலியார்,தமிழ்நாடு அரசின் பூங்குன்றனார் விருது பெற்ற எழுத்தாளர் ஜெஸிலா பானு,திரிகூடபுரம் முகம்மது முஸ்தபா. இர்ஷாத், பருத்தி இக்பால், இஞ்சினியர் பாலா,இளமுருகன், தாரிக், மணிவேல்,பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் அஹமது கபீர், வி கே புரம் பாலா, உதயாநிதி ஸ்டாலின் நற்பணி மன்ற தலைவர் பாலா, பாருக், கொரடாசேரி ஜெகபர் அலி,அன்வர், தென்காசி மாவட்ட அயலக அண் இஸ்மாயில், பாவை பொறியாளர் பஹீம், காரைக்கால் மாவட்ட திமுக அயலக அணி துணை அமைப்பாளர் செந்தில் பிரபு, மச்சேந்திரன், தமிழ் எப் எம் மகேந்திரன், கடையனல்லூர் உதுமான , அமீன், வல்லரசு உள்ளிட்ட ஏராளாமான அமீரக திமுகவினர் கலந்து கொண்டனர். பின்னர் கேக் வெட்டி தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

நிறைவாக பிளாக் துளிப் செந்தில் நன்றி கூறினார்



தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 71 வது பிறந்த நாள் விழா 1–03–2024 அன்று துபாய் "லேண்ட்மார்க் ஹோட்டல் பனியாஸ் ஸ்கொயர்" வளாகத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அயலக தமிழர் வாரிய உறுப்பினரும்,அமீரக திமுக பொறுப்பாளருமான எஸ்.எஸ்.மீரான் ஏற்பாட்டில் நடந்த இந்நிகழ்ச்சியை ஏஜிஎம் பைரோஸ்கான் தொகுத்து வழங்கினார்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் கமல் கிஷோர், தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ., ஒன்றியக் குழுத் தலைவர்கள் திவ்யா மணிகண்டன், காவேரி சீனித்துரை, போக்குவரத்து துணை ஆணையர் ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### பஹ்ரைன் நாட்டில்,

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி - கழகத் தலைவருக்குப் புகழாரம்!

மனாமா (பஹ்ரைன்), மார்ச் 8 - மார்ச்1, வெள்ளிக்கிழமை அன்று வளைகுடா நாடான பஹ்ரைன் நாட்டில் தலைநகர் மனாமாவில் உள்ள இந்தியன் கிளப்பில் மக்களின் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின் சார்பில் அதன் பொறுப்பாளர் முகமது ஹுசைன் மாலிம் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்த் தாய் வாழ்த்துடன் தொடங்கிய நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட திமுக தொண்டர்கள், தோழமை இயக்கத்தின் தோழர்கள் மற்றும் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

**திராவிட மாடல் ஆட்சி நாயகர்!**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கால சாதனைகளை பற்றி பலரும் பல்வேறு தலைப்புகளில் பேசினார்கள்.

"ஏன் வேண்டும் திராவிட மாடல் ஆட்சி"? என்ற தலைப்பில் ஆலோசனைக் குழு தலைவர் கபீர் அகமது பேசுகையில், எல்லோருக்கும், எல்லாமும் கிடைத்திட இந்த திராவிட மாடல் ஆட்சி கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் தமிழ் நாட்டில் நிரந்திரமாக அமைய வேண்டும் என்று கூறினார்.

"மக்களின் முதல்வர் மு.க. ஸ்டாலின்" என்னும் தலைப்பில் துணைத் தலைவர் கருணாநிதி சண்முகம் பேசுகையில், நாட்டில் எழை எளிய மக்கள் பயன் பெரும் வகையில் புதிய பல திட்டங்களை திமுக அரசு தொடர்ந்து செயல் படுத்துவதாகக் கூறினார். "தமிழ் நாட்டின் பொருளாதார வளர்ச்சி " என்ற தலைப்பில் பேசிய உறுப்பினர் சேர்க்கைச் செயலாளர் ஆபீத் அலி. "ஒட்டு மொத்த இந்தியாவின் வளர்ச்சியை விட தமிழ் நாட்டில் பொருளாதார வளர்ச்சி மிக முன்னேறிய நிலையில் உள்ளது" என்று எடுத்துக் கூறி பேசினார்.

தலைமை உரை நிகழ்த்திய பொறுப்பாளர் முகமது ஹுசைன் மாலிம். 2024 நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியின் வெற்றி பெற வேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். மேலும் சமூக வலைத் தளத்தில் தி.மு.க. தொண்டர்கள் தொடர்ந்து தி.மு.க ஆட்சியின் சாதனைகளை தொடர்ந்து பதிவு செய்வதுடன்.

வெளிநாடுகளில் வாழும் தொண்டர்கள், தாயகத்தில் வாழும் தங்களின் குடும்பத்தினர்களையும், நண்பர்களையும் தொடர்பு கொண்டு தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்க கேட்டு கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தி பேசினார்.

வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கத்தின், சவூதி அரேபியாவின் துணைப் பொறுப்பாளர் சந்தோஷ் கலந்து கொண்டு, திராவிட மாடல் ஆட்சி மகளிர்களுக்கு மிக பயனுள்ள பல திட்டங்களை தொடர்ந்து செயல் படுத்துவதாகக் கூறினார். குடந்தை ஆரிப் பேசுகையில், "சமூக நீதியை நிலை நாட்டுவதில் முதல்வர் அவர்களின் இந்த திராவிட மாடல் மிகவும் உறுதியாக உள்ளது" என்றார்.

தக்கலை சாம் பேசும்போது, குடும்ப பெண்களுக்கான உரிமைத் தொகை வழங்குவது மூலம், பெண்களின் சுய மரியாதை காக்கப் படுகிறது என்பது எடுத்துக் கூறினார்.

தமிழரசன், சேகர், சோழகர் திருமேனி, அசரி துறை ஆகியோர் தி.மு.க. ஆட்சியின் சாதனைகளைப் பட்டியலிட்டுப் பேசினார்கள். மேலும். இந்தியப் பள்ளியின் ஆட்சி மன்றக் குழுச் செயலாளர் ராஜ பாண்டியன், முத்து தீவு தமிழ் சங்கத்தின் செயலாளர் முகமது பைசல். த.மு.மு.க சார்பில் யூசுப் ராஜகிரி. முஸ்லிம் லீக் சார்பில் பேராசிரியர் சுலைமான். ஆகியோரும் கலந்து கொண்டு கழகத் தலைவர் அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

தொழிலாளர் நலத் துறை செயலாளர் மேலப்பூந்தை இஸ்மாயில் வரவேற்க துணைப் பொறுப்பாளர் சுல்தான் இப்ராஹிம் தொகுத்து வழங்க, சமூக சேவைச் செயலாளர் மன்னை பிரபா நன்றி கூறினார்.

### அரியலூர் மாவட்டம் - குன்னம் தொகுதியில் 1,000 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியில் விலையில்லா வீட்டுமனைப் பட்டா

# 2,519 பயனாளிகளுக்கு ரூ.16.88 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், மார்ச் 8 – அரியலூர் மாவட்டம்,குன்னம் தொகுதி செந்துறை ஒன்றியம், செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 1,000 பயனாளிகளுக்கு ரூ.1 கோடி மதிப்பிலான விலையில்லா வீட்டு மனைப் பட்டாக்களையும், தமிழக அரசின் பல்வேறு துறைகளி;ன் சார்பில் 2,519 பயனாளிகளுக்கு ரூ.16.88 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் கிராம நத்தம் பகுதிகளுக்கு இணையவழியில் பட்டா மாறுதல் சேவைகள் வழங்குவதற்கான நத்தம் இணையவழி பட்டா மாறுதல் திட்டம் என்ற புதிய திட்டத்தை 04.03.2024 அன்று மயிலாடுதுறை மாவட்டத்தில் தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து இன்றையதினம் அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வருவாய்த் துறையின் சார்பில் பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளையும் அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

விலையில்லா வீட்டுமனைப் பட்டா மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி, அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது: –

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏழை, எளியோருக்கான திட்டங்களை அவர்களை தேடி வழங்கிட வேண்டும் என்ற தெரிவித்துள்ளதன்படி வருவாய் துறையின் சார்பில் 19 திருநங்கை பயனாளிகளுக்கும், 15 இருளர் பயனாளிகளுக்கும், 966 இதர பயனாளிகளுக்கும் என மொத்தம் 1,000 பயனாளிகளுக்கு ரூ.1 கோடி மதிப்பிலான விலையில்லா வீட்டுமனைப் பட்டாகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மகளிர் திட்டம் சார்பில் 1324 பயனாளிகளுக்கு ரூ.7 கோடியே 52 இலட்சம் மதிப்பில் மகளிர் சுய உதவிக் குழு கடனுதவிகளையும், 15 பயனாளிகளுக்கு ரூ.7 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் பண்ணை சாரா தொழில்முனைவோர் கடனுதவிகளையும், முன்னோடி வங்கியின் சார்பில் 69 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 64 இலட்சம் மதிப்பில் கல்வி கடனுதவிகளையும், வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் 06 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பிலான பவர் டில்லர்களையும், 02 பயனாளிகளுக்கு ரூ.90 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் கரும்பு அறுவடை இயந்திரங்களையும், 01 பயனாளிக்கு ரூ.3,250 மதிப்பில் விதைப்பான்களையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் சார்பில் 56 பயனாளிகளுக்கு ரூ.9 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் உழவர் பாதுகாப்பு திட்டத்தினையும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 651 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 77 ஆயிரம் மதிப்பில் மகளிர் சுய உதவிக்குழு கடனுதவிகளையும், 175 பயனாளிகளுக்கு ரூ.1 கோடியே 57 ஆயிரம் மதிப்பில் பயிர் கடனுதவிகளையும், 195 பயனாளிகளுக்கு ரூ.56 இலட்சம் மதிப்பில் கால்நடை பராமரிப்பு கடனுதவிகளையும், சுகாதாரத் துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.20,000 மதிப்பில் ஊட்டச்சத்து பெட்டகத்தினையும், மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.1 இலட்சம் கிறுஸ்துவ மகளிர் உதவும் சங்கத்திற்கும், 05 பயனாளிகளுக்கு ரூ.29,500 மதிப்பில் தையல் இயந்திரங்கள் என மொத்தம் 2,519 பயனாளிகளுக்கு ரூ.16,87,78,750 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று வேளாண்மைத்துறையின் சார்பில், அரியலூர் வட்டாரத்தில் 6931 எக்டர் பரப்பளவிலும், செந்துறை வட்டாரத்தில் 2194 எக்டர் பரப்பளவிலும், திருமானூர் வட்டாரத்தில் 6798 எக்டர் பரப்பளவில் என மொத்தம் 15,924 எக்டர் பரப்பளவில் மக்காச்சோளம் பயிரிட்டு பாதிக்கப் பட்ட 20,338 விவசாயிகளுக்கு ரூ.11.79 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்துள்ள "நீங்கள்; நலமா என்ற திட்டத்தின்படி தமிழக அரசு நலத்திட்டங்களில் பயன்பெறுபவர்களை நேரடியாக தொடர்பு கொண்டு அத்திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்களா, இன்னும் என்ன தேவைகள் உள்ளது என்பதை அறியும் திட்டமாக இத்திட்டத்தினை அறிவித்ததுடன், பல்வேறு பயனாளிகளை தொடர்பு கொண்டு தமிழக அரசு திட்டங்களின் பயன்கள் குறித்து கேட்டறிந்துள்ளார்.

மேலும் அமைச்சர் பெருமக்களும், இத்திட்டத்தின் படி பொதுமக்களை தொடர்பு கொண்டு அரசு நலத்திட்டங்களின் பயன்கள் குறித்து கேட்டறிய வேண்டும் என்ற அறிவுரையின்படி நான் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலிருந்து பெரம்பலூர் மாவட்டத்திற்குட்பட்ட ஐந்து பயனாளிகளிடமும். போக்குவரத்துத் துறை அமைச்சர் என்ற முறையில் அந்த துறையிலே பயன்பெற்ற ஐந்து பயனாளிகளிடம் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட ஐந்து பயனாளிகளிடம் தொடர்பு கொண்டு பேசினேன். அவர்களில் ஒரு நபரிடம் பேசும் போது கல்கத்தாவில் இருந்து விருதுநகர் மாவட்டத்தில் கல்லூரி பேராசிரியராக பணிபுரியும் ஒருவர் தனக்கு ஓட்டுநர் உரிமம் எளிய முறையில் கிடைத்ததாகவும், சாலைகள், போக்குவரத்து வசதிகள் நல்ல முறையில் இருப்பதாகவும், பெண்கள் பேருந்துகளில் கட்டணமில்லாமல் செல்வது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளதாகவும், இதுபோன்று தங்கள் மாநிலத்தில் இல்லை ஆனால் தமிழ்நாட்டில் உள்ளது என்றும் தெரிவித்தார்.


அந்தவகையில் நம்முடைய மக்கள் எல்லாவகையிலும் முன்னேற்றம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிர் விடியல் பயணம் என்ற திட்டத்தை செயல்படுத்தியதை தொடர்ந்து மற்ற மாநிலங்களிலும் இன்று செயல்படுத்தி வருகிறார்கள். அதேபோன்று மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டம் இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இல்லை. தற்போது இத்திட்டத்தினை மத்திய பிரதேசத்தில் அமல்படுத்தியுள்ளனர். கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில், பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு மதியம் சத்துணவு வழங்கப்படுகிறது. இருப்பினும் பெற்றோர்கள் இருவரும் காலை நேரத்தில் வேலைக்கு செல்வதால் குழந்தைகள் காலை நேரங்களில் சாப்பிடுவது இல்லை என்பதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரடியாக

சில குழந்தைகளிடம் கேட்டவுடன் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டத்தினை செயல்படுத்தினார்கள். குழந்தைகள் பசியில்லாமல் காலையில் படிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டத்தினை கொண்டு வந்துள்ளார்கள்.

மேலும், கல்லூரிகளில் பயிலுகின்ற பெண்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது என்பதை அறிந்து 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் பயின்று கல்லூரியில் படிக்கும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள். வரும் காலங்களில் ஆண் குழந்தைகளும் கல்லூரியில் பயிலும் போது மாதம் ரூ.1000 வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் ம.ச.கலைவாணி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் லெட்சுமணன், வருவாய் கோட்டாட்சியர்கள் ராமகிருஷ்ணன் (அரியலூர்), ஷீஜா (உடையார்பாளையம்), செந்துறை வட்டாட்சியர் வேலுமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், கருணாநிதி, சர்புதீன், காளமேகம், ஆனந்த், ராமராஜன், தர்மராஜ்,சுந்தர்,

உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி, கழகத் துணை பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி வழிகாட்டுதலோடு, விழுப்புரம் தெற்கு மாவட்டம் சார்பில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் தும்பூர் ஊராட்சியில் இல்லம்தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணைப் பிரச்சாரம் நிகழ்ச்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு வீடுகளிலும், கடைகளிலும் திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க துண்டுப் பிரசுரங்களை வழங்கினார். ஒன்றியச் செயலாளர் ஜெ.ஜெயபால், ஒன்றியப் பொருளாளர் முரளி, மாவட்டப் பிரதிநிதி வேல்முருகன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சாவித்திரி பாலு, ராம்குமார், மாவட்ட கண்காணிப்பு குழு எத்திராஜன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கலைச்செல்வன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, ஒன்றிய இளைஞர் அணி பாலகிருஷ்ணன், ஐ.கே.சங்கர், அசோக், கிளை சேகர், முத்துகுமார், சம்மந்தம், கணேசன், ராஜேந்திரன், கண்ணன், வினோத், வி.சாலை ராமலிங்கம் மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.